**வேலணை பிரதேசசபை.**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 17 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வேலணை பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபையின் பயன்பாட்டிலுள்ள 12 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் உரிமை அல்லாத, பயன்பாட்டிலுள்ள 31 வாகனங்களின் ரூபா 18,215,636 பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி ரூபா 18,215,636 ஆல் கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 கணக்கு பதிவேடு மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சபையினால் இழப்புக்கள் சேதங்கள் பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு, வீதி விளக்கு பதிவேடு, அளவைப்பத்திர பதிவேடு, காணி விற்பனவு பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு அலுவலரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 35,295 பத்து வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமலுள்ளது.

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து வைப்பிலிடப்பட்டுள்ள சம்பளங்கள் ரூபா 29,335 அறிக்கையிடும் திகதி வரை உரியவருக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) உத்தியோகத்தருக்கு கொடுக்கவேண்டிய ரூபா 14,644 சம்பளம் 2005 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

தேவையான சான்றுகள் இல்லாமையின் காரணமாக ரூபா 153,738 பெறுமதியான 04 கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் இலக்கம் 148 (1) | வாகனங்கள், விலங்குகள் மீதான வரியை விதிப்பதற்கு பிரதேச சபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்கள் விலங்குகள் மீதான வரியானது குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | |
| (i) நிதிப்பிரமாணம் 381(3) | காசோலைகளிற் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் பிணை செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 67,004 தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1646 | குறிப்பிட்ட மாதத்தின் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணை தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய 41/90 ம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபம் | சபையின் வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

-------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டெழும் செலவினத்தைவிடக் கூடிய வருமானமாக ரூபா 11,181,818 ஆக இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தைவிட கூடிய வருமானமாக ரூபா 9,235,424 ஆக இருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 1,946,394 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி விளைவு

-------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறியமிகையாக ரூபா 42,198 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறியமிகையாக ரூபா 1,046,683 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 1,004,485 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படுமூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 38,906,074 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படுமூலதனம் ரூபா 29,822,929 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படுமூலதனம் ரூபா 9,083,145 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.4 வருமான நிர்வாகம்

------------------------------

#### 2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

-----------------------------------------------

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2016 மதிப்பிடப்பட்டது | 2016 உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| | 000 | 000 | 000 |
| இறைகளும் வரிகளும் | 797 | 711 | - |
| குத்தகை வாடகைகள் | 1,418 | 1,385 | 150 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 245 | 314 | - |
| வேறு வருமானங்கள் | 36,434 | 42,870 | - |
| **மொத்தம்** | **38,894** | **45,280** | **150** |

### 2.4.2 ஆதனவரி

சபைக்குட்பட்ட ஆதனங்களில் இருந்து ஆதனவரி இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 குத்தகை மற்றும் வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குத்தகை நிலுவையாக ரூபா 116,233 இன்றுவரை அறவிடப்படாமலுள்ளது.

(ஆ) வாடகை நிலுவையாக ரூபா 9,225 இன்றுவரை அறவிடப்படாமலுள்ளது.

### 2.4.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபையின் எல்லைக்குள் உள்ள 10 தொலைத் தொடர்பு கோபுரத்திற்கான கட்டட அனுமதி, வருடாந்த வரி என்பன பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.4.5 முத்திரைக்கட்டணம்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 17,296,312 பெறுமதியான முத்திரைக்கட்டணங்கள் இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டிலிருந்து சாட்டி கிணறு அமைப்பு வீதிக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 331,935 உரிய தேவைக்கு பயன்படுத்தப்படாது உள்ளது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபை பங்களிப்பு ரூபா 168,158 உரியவருக்கு வழங்கப்படாது உள்ளது.

(இ) சனசமூக நிலைய நன்கொடைகள் ரூபா 257,400 உரிய சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படாது உள்ளது.

(ஈ) சபையில் 84 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 66 பதவியினரே கடமையாற்றுகின்றனர் ஆகவே 18 பதவியினர் பற்றாக்குறையாக உள்ளனர்.

(உ) குறிப்பிட்ட சபையில் 13 மயானங்கள் காணப்படுகின்றபோதும் மயானவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) சபையின் உப அலுவலகங்கள், நூலகங்களிலிருந்து வருடாந்த கணக்கெடுப்பின்போது 46 வகையான 578 பொருட்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது.

**3.2 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாகன சுத்திகரிப்பு நிலையம், நவீன உபகரணங்களுடன் பூங்கா, துறையூர் மீன் சந்தை, முத்தவெளி சந்தைத் தொகுதி, தொழில் பயிற்சி நிலையம் ஆகிய புதிதாக அமைக்கப்பட்ட சொத்துக்கள் பயன்படுத்தப்படாமலுள்ளது.

(ஆ) சபையில் 16 வாகனங்கள் பயன்படுத்தப்படாமலுள்ளன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------

மீளாய்வாண்டில் 09 செயற்திட்டங்கள் சபையினால் முற்றாக கைவிடப்பட்டுள்ளது.

**3.4 செயற்திட்டத்தின் தாமதம்**

-------------------------------------

ரூபா 1,300,000 பெறுமதியான 02 மூலதனவேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.5 கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

-------------------------------------------------------

கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு குவிக்கப்படுகின்றதே தவிர தரம் பிரிக்கப் பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

------------------------------------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

-----------------------------------

**செலவினக் கட்டமைப்பு**

------------------------------------

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 61,000 தொடக்கம் ரூபா 1,517,264 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.